கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலை கலாசார பீடம்
இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு
சிறப்புக் கலைமாணித்தேர்வு 2011/2012

**SOCS – 2204** வேலை மற்றும் ஒழுங்கமைப்பு பற்றிய சமூகவியல்
**(Sociology of Work and Organization)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

பகுதி 1 இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி 11 இல் இருந்து ஒரு வினாவிற்கும் மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

பகுதி 1

01. அ) வேலை ( Work ) என்னும் எண்ணக்கருவை சமூகவியல் அறிஞர்களின் துணைக் கொண்டு வரையறுக்குக. ( 10 புள்ளிகள் )

ஆ) வேலைக்கும், பண்பாட்டிற்குமான தொடர்புகளைத் தக்க உதாரணங்களோடு விபரிக்குக. ( 15 புள்ளிகள் )

02. அ) கைத்தொழில் புரட்சியின் பிரதான குணாம்சங்களைச் சுருக்கமாக எடுத்துக் கூறுக. ( 10 புள்ளிகள் )

ஆ) கைத்தொழில் மயமானது தொழிற் கட்டமைப்பில் ஏற்படுத்திய மாற்றங்களை விபரிக்குக. ( 15 புள்ளிகள் )

03. அ) மார்க்ஸ் ( Karl Marx ) பேசும் அந்நியமாதலின் அடிப்படைக் கருத்துக்களை விபரிக்குக. ( 10 புள்ளிகள் )

ஆ) வேலையின் பண்புகள் தொடர்பாக மோரிஸ் ( Morres ) முன்வைத்த சிந்தனைகளை எடுத்துக் காட்டுகளோடு தொகுத்துரைக்குக.

( 15 புள்ளிகள் )

04. அ) வேலைச் சமூகவியலிற்கான மக்ஸ்வேபரின் ( Max Weber ) பங்களிப்புப் பற்றி எடுத்துரைக்குக. ( 10 புள்ளிகள் )

ஆ) தொழிற் பிரிப்பு ( Division of Labour ) பற்றி எமில் டேர்க்கீம் ( Emile Durkheim ) முன்வைத்த சிந்தனைகளை சமகால உதாரணங்களோடு விபரிக்குக. ( 15 புள்ளிகள் )

## பகுதி II

05. தொழிற் சந்தையிலும், தொழிலாளர் உரிமை தொடர்பிலும், பால்நிலை அசமத்துவம் இன்று வரை பிரதிபலிக்கப்படுவதாக முன்வைக்கப்படும் கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்து உமது கருத்துக்களையும் விரிவாக எடுத்துரைக்க. ( 25 புள்ளிகள் )

06. அண்மைக்காலமாக அவுஸ்திரேலியாவிற்குச் சட்ட விரோதமான வகையில் பெருந்தொகையானோர் புலம்பெயர்வதற்கு இலங்கையின் தொழில் வாய்ப்பு முறைமையில் நிலவும் குறைபாடுகளும் ஒரு காரணமாகக் கருத்துரைக்கப்படுகிறது. எனவே இப்பிரச்சினையைச் சமூகவியல் ரீதியில் அணுகி உமது தீர்வாலோசனைகளையும் விரிவாக முன்வைக்குக.

( 25 புள்ளிகள் )